www.Padasalai.Net www.CBSEtips.in



**ஓம்சக்தி**

**ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

**பதினொன்றாம் வகுப்பு நான்கு மதிப்பெண் வினா விடைகள்**

1. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.

**மொழி முதல் எழுத்துகள் : 22**

உயிரெழுத்துகள் 12 (அ,ஆ,இ, ஈ, உ, ஊ,எ,ஏ, ஐ, ஒ, ஓ, ஔ )

மெய்யெழுத்துகள் 10 (க, ங, ச , ஞ , த, ந, ப , ம , ய , வ )

**மொழி இறுதி எழுத்துகள்: 24**

உயிரெழுத்துகள் 12 (அ,ஆ,இ, ஈ, உ, ஊ,எ,ஏ, ஐ, ஒ, ஓ, ஔ )

மெய்யெழுத்துகள்: 11 (ண், ம், ன், ய், ர், ல், ழ், ள், )

குறிப்பு: - ஞ், ந், வ் - பழைய இலக்கிய வழக்கில். சொல்லின் இறுதியில் வந்துள்ளது.

ஆய்த எழுத்து:1

2. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது.

Padasalai

- ✓ என் அன்னை ஒற்றியெடுத்த நெற்றி மண் அழகே
- ✓ வழிவழியாக நினது அடிகளை வணங்கியவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம் நிறைவான செல்வம் தந்தவளே
- ✓ உன்னை வாழ்த்திப ல்லாணடு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும்.
- ✓ காற்றிலே ஏறி, நிறைகடலை, நெருப்பாற்றினை, மலை உச்சிகளைக் கடந்து செல் எனக் கூறியவுடன் செல்லுகின்ற ஓர் பாடலை கபாடபுரங்களை பலி கொண்ட பின்னரும்
- ✓ காலத்தால் அழியாத தொன்மையான கனிமங்களின் வலிமையெல்லாம் சேரப்பாடத்தான் வேண்டும். என்னை எழுத ஏடு தொடங்கி வைத்து என்
- ✓ அன்னை மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதச் செய்த விரல் முனையைத் தீயிலே தடவி திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேணடும் எழுகின்ற புதிய யுகத்திற்கானப் பாடலை என சு. வில்வரததினம் பல்லாண்டு பாடுவது தமிழ்த்தாய்க்குப் பொருந்துகிறது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

3. "என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

- ✓ நான் பேசும் பொழுதும், எழுதும் பொழுதும் தூய தமிழ்ச்சொற்களையே பயன்படுத்துவேன்.
- ✓ என் நண்பர்களையும் தமிழிலேயே பேசுமாறு கேட்டுக்கொள்வேன்.
- ✓ பாரதி, பாரதிதாசன், கம்பன், வள்ளுவன் இயற்றிய நூல்களை படித்து நன்கு தெளிவேன்.
- ✓ சிறப்பிற்குரிய என் தமிழ்மொழியை என்னால் இயன்ற வரை வளர்க்க பாடுபடுவேன்.

4. கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?

- ✓ ஒன்றை மற்றொன்றால் உணர்த்துவதே குறியீடு,
- ✓ கிளி இருப்பது கூண்டில், அது திறந்தாலும் பறப்பதற்கல்ல.
- ✓ சீட்டெடுப்பதற்கு என அடிமைகளின் வாழ்வியல் முறை கூற்றில் குறியீடாக அமைந்துள்ளது.

Padasalai

5. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

- ✓ நூலின் இயல்பு
- ✓ ஆசிரியர் இயல்பு
- ✓ கற்பிக்கும் முறை
- ✓ மாணவர் இயல்பு
- ✓ கற்கும் முறை
- ✓ நூலாசிரியர் பெயர்
- ✓ நூல் பின்பற்றிய வழி
- ✓ நூல் வழங்கப்படுகின்ற நிலப்பலப்பு
- ✓ நூலின் பெயர்,யாப்பு
- ✓ நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- ✓ நூலைக் கேட்போர் நூலைக் கற்பதால் பெறும் பயன் ஆகியன முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் குறிப்பிடுகிறது.

6.வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? ___ நும் கருத்தை எழுது



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ✓ வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமே.
- ✓ நம் முன்னோர்கள் எந்த இரசாயனப் பூச்சிக் கொல்லியையும் பயன்படுத்தவில்லை
- ✓ இன்றைய இராசாயன பூச்சிக்கொல்லியால் நமக்கு ஏற்படும் பாதிப்புகளை மக்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- ✓ எளிய பொருளால், பூச்சிக்கொல்லி தயாரிக்கப்படும் முறைகளை மக்கள் எல்லாருக்கும் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும்.
- ✓ மண்ணும் நுண்ணுயிரியும் பாதுகாக்கப்படும் என்பதை உணர்ந்து இயற்கை பூச்சிக்கொல்லி நடை முறைக்குசாத்தியமே எனக் கூறுகிறேன்.

7. காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?, ஏன்?

- ✓ காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு தூக்கணாங்குருவியின் கூடாகும்.
- ✓ கட்டடக் கலை வல்லுநராலும் கூட கட்டமுடியாத புல்லைக் கொண்டு கட்டிய தூக்கணாங் குருவியின் கூடு காற்றில் ஆடும் புல்வீடு ஆகும்.

8. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**இடம் :** பெரியவன் கவிராயர் எழுதிய "திருமலை முருகன் பள்ளு" என்னும் நூலில் வட கரைநாட்டின் இயற்கை வளத்தைக் கூறும் பாடலில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

**பொருள் :** தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம் :**

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள்"இந்தளம்" என்ற பண்ணை ரீங்காரமிட்டுப்பாடுவதைக் கேட்டு, மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த "உள்ளான்" பறவை வண்டுகளின்இசையில் மயங்கி அமர்ந்திருப்பதால் தாமரைத் தடாகத்தில் மீன்கள் அச்சமின்றித் துள்ளிப்பாய்ந்து விளையாடுகிறது.

9.ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

- ✓ திணை: முல்லை
- ✓ முதற்பொருள் : நிலமும் பொழுதும்
- ✓ காடும் காடு சார்ந்த இடமும், - பொழுது ___ கார்காலம், மாலை
- ✓ கருப்பொருள்:



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ✓ தெய்வம் : மாயோன்(திருமால்)
- ✓ மக்கள் : ஆயர், ஆய்ச்சியர்
- ✓ பறவை : காட்டுக்கோழி
- ✓ விலங்கு : மான், முயல்
- ✓ ஊர் : பாடி
- ✓ நீர் : குறுங்சுனை, கானாறு
- ✓ மரம் : முல்லை, தோன்றி, கொன்றை, காயா, குருத்தம்

10.தமிழ் நெடுங் கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.

- ✓ மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம் இடையினம் என மூவகைப்படும்.
- ✓ சொற்களின் இடையில் மெல்லின எழுத்துகளுக்குப்பின் வல்லின மெய்கள் மட்டுமே வருவதை இனவெழுத்துகள் அல்லது நட்பெழுத்துகள் என்பர்.
- ✓ அங்கம் - ங் -க
- ✓ பஞ்சம் - ஞ் - ச்
- ✓ பண்டம் - ண் - ட்
- ✓ சந்தம் - ந் - த்
- ✓ கம்பம் - ம் - ப்
- ✓ தென்றல் - ன் - ற்
- ✓ எங்கெங்கு இவ்வெழுத்துகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை இனவெழுத்துகளால் அறியலாம்.

11.மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது ___ என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க

- ✓ சேயோன் மேய மைவரை உலகம் - தொல்காப்பியம்
- ✓ விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ - திருமுருகாற்றுப் படை
- ✓ திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர் தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.
- ✓ ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்
- ✓ தங்கள் குடியிருப்பு பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகள் இவற்றிலிருந்து நீர் எடுத்து பருகுகிறார்கள். அவர்களின்
- ✓ வீடுகளில் திண்டுகள்(மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ✓ நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- ✓ தமிழ் மொழியில் 'கோட்டை" என்னும் சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
- ✓ மலையாளம் - கோட், கோடு
- ✓ கன்னடம் - கோட்டே, கோண்டே
- ✓ தெலுங்கு - கோட்ட
- ✓ துளு - கோட்டே
- ✓ தோடா - க்வாட்

12.தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

- ✓ காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று
- ✓ உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில், காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.
- ✓ வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர் வழிநடைப் பாடலாகப் பாடும் பாடல்வகை காவடிச்சிந்து.

13. சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இக்காலச்சமூக நிகழ்வுகள் எழுந்தில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.

**சங்க கால நிகழ்வு:**

- ✓ மணம் முடிக்க வரும் தலைவன் பெரியோர் முன்னிலையில் தன் பரிசப்பொருள்களை வைத்து அவர்களிடம் சம்மதம் பெறுதல்
- ✓ தலைவன் கொண்டு வந்த பொருட்களை கண்டு நிறைவு அடைந்தப்பின் பெண்ணை திருமணம் செய்து கொடுக்க முன்வருகிறார்கள்.
- ✓ இக்கருத்தினை வெள்ளிவீதியார் பாடிய குறுந்தொகை வாயிலாக நாம் அறிந்த ஒன்று

**இக்கால நிகழ்வு:**

- ✓ மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை மணம் முடிக்க வாய் கூசாமல் பொருட்களைக் கேட்டல்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ✓ பெண் வீட்டார் அவர்கள் கேட்ட பொருள்களை கொடுத்து, அவர்கள் நிறைவு அடைந்தப்பின் மணமுடிக்க சம்மதம் தெரிவிப்பர்.
- ✓ மாப்பிள்ளை பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்காக பொருளை பெற்றுக்கொண்டு திருமணம் செய்துக்கொண்டு, பெண்ணை அழைத்து செல்வர்.
- ✓ சங்ககால வழக்கம் வியப்புக்குரியது, தற்கால வழக்கம் இழிவுக்குரியது.

14.புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

**புறநானூறு:**

- ✓ ”உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
  அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
  தமியர் உண்டலும் இலரே”
- ✓ ”துஞ்சலும் இலரே”
- ✓ ”புகழ் எனின் உயிருங் கொடுக்குவர், பழியெனின்
  உலகுடன் பெறினும் கொள்ளலர்”

**திருக்குறள் :**

- ✓ விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
  மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று
- ✓ கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
  தூக்கங் கடிந்து செயல்
- ✓ வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
  வாழ்வாரே வாழா தவர்

15.தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

- ✓ தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை ஓதற்பிரிவு என்கிறது
- ✓ கல்வியின் பொருட்டு தோன்றும் மெய்ப்பாடு பெருமிதம் என்கிறது தொல்காப்பியம்.
- ✓ மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ள நூல்கள் நன்னூல், தொல்காப்பியம்
- ✓ கற்றலின் அவசியத்தை புறநானூறு கூறுவது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- ✓ உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”
- ✓ திருமந்திரம் : துணையாய் வருவது தூயநற் கல்வி
- ✓ நாலடியார் : கல்வி அழகே அழகு
- ✓ ஆத்தி சூடி: இளமையில் கல்

16.சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் குறிப்பு வரைக.

- ✓ **சமண சமயத்தின் தலையாய அறங்கள்**
  கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம்
- ✓ **பள்ளி எனும் சொல்லின் விளக்கம்**
  பள்ளி என்னும் சொல் படுக்கை எனும் பொருள்
  பள்ளி எனும் சொல் சமண, பௌத்தசமயங்களின் கொடையாகும்.
- ✓ **படுக்கை எனக்குறிப்பிடும் கல்வெட்டுகள்**
  திருச்சி மலைக்கோட்டையிலும்
  கழுகுமலை கல்வெட்டிலும்
- ✓ **சமண பெண் ஆசிரியர்.**
  பட்டினிக்குரத்தி என்பவள் விளாம்பாக்கத்தில் சமணப்பள்ளியை நிறுவியவர்.
  வந்தவாசி, வேடல் எனும் ஊரில், சமணப்பள்ளியில் பெண் ஆசிரியர் 500 மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார்.

17.”ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி” இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**இடம்:** நற்றிணை ,போதனார் பாடிய பாலைத் திணை ,கணவன் வீட்டில் வாழும் மகள் குறித்து செவிலித்தாய், நற்றாயிடம் கூறுவது.

**பொருள் :** விளையாட்டுப் பருவம் மாறாத பெண்ணான நம் மகள் இல்லறம் ஆற்றும் நல்ல அறிவும் ஒழுக்கமும் எங்கிருந்து உணர்ந்து கொண்டாளோ? என்று நற்றாயிடம் செவிலித்தாய் வியந்து கூறினாள்.

**விளக்கம் :** தேன் கலந்த பாலை உண்ண மறுத்து ஓடிய விளையாட்டுப்பெண் பருவமடைந்து, தானே தன் வாழ்க்கையைத் தேடியடைந்து, இல்லறம் நடத்தும் போது,ஒரு பொழுது மறுத்து ஒரு பொழுது உண்ணும் உறுதிப்பாடு பெற்றவளாய் விளங்குகிறாள்.இத்தகைய அறிவும் ஒழுக்கமும் எங்கே உணர்ந்துக் கொண்டாளோ? என்று செவிலித்தாய், நற்றாயிடம் கூறுகிறாள்.

18.புத்தகத்தில் உள்ள (பக்கம் 112,சிறுவினா எண் 4) கவிதை வெளிப்படுத்தும் கருத்து



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- ✓ பெண் குழந்தை துண்டைக் கட்டிக் கொண்டு இளம் பெண்ணைப் போலவும் தாயைப் போலவும் மாறுகிறாள்
- ✓ ஒரு சிறு நாற்காலி அவளுடைய வீடாகிறது.ஆனால், பெற்றவருக்கோ அவளை படிக்க வைத்து நல்லதொரு வாழ்வை அமைத்து தரும் பொறுப்புள்ளது
- ✓ இக்குழந்தை வளர மிகப்பெரிய பொருளாதாரத் தேவை அவசியமானதால், எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்ற துக்கம் ஏற்படுகிறது.

19.உள்ளுறை உவமை இறைச்சி எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக

**உள்ளுறை உவமை**

கவிஞன் தான் கூறக்கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் அகமாந்தரின் மன உணர்வுகளைக் கருப்பொருள்கள் மூலம் உவமைப் படுத்துவதை உள்ளுறை உவமம் என்பர்

எ.கா :

ஈயல் புற்றத்து ஈரம்புறத்து இறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குல் - பெருங்குன்றூர் கிழார்

- ✓ தலைவன் பிறர் அறியாமல் தலைவியைச் சந்திக்க இரவு நேரத்தில் வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடியொன்று ஈசல்கள் நிறைந்த புற்றில் கையைவிட்டுப் பார்க்கிறது.
- ✓ அந்த ஈசல் புற்றில் சுருண்டுபடுத்திருந்த பாம்பினைக் கரடி அறியவில்லை. கரடியின் நகங்கள் பட்டு, பாம்பு வலியால் துடிக்கிறது.
- ✓ இங்குக் கரடியின் செயலும் பாம்பின் துன்பமும் காட்டப்படுகின்றன.
- ✓ ஆனால், உள்ளே மறைந்திருக்கும், செய்திவேறு. இரவு நேரத்தில் காட்டைக் கடந்து வரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது.
- ✓ கரடி தலைவனுக்கும் பாம்பு தலைவிக்கும் குறியீடுகளாய் அமைந்து உள்ளுறை உவமயம் உருவாகிறது.
- ✓ தோழிக்குச் சொல்வது போல் தலைவி, மறைந்து நிற்கும் தலைவனுக்குச் சொல்கிறாள்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**இறைச்சி**

இறுத்தல் என்றால் தங்குதல் எனப் பொருள்படும். உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும். புலவன் இயற்றிய செய்யுளின் பொருளுக்குப் புறத்தே தோன்றுவது இறைச்சி.

எ. கா:

"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே" ___ நற்றிணை

- ✓ நீ விளையாடி மகிழும் இடத்திலுள்ள இப்புன்னைமரம் உன்னைவிடச் சிறந்தது என்றும் உனக்குத் தங்கையாவாள் என்றும் நற்றாய் என்னிடம் கூறினாள். அதனால் இம்மரத்தடியில் உம்முடன் விளையாட நாணுகிறேன்.
- ✓ ஏனெனில் தங்கை அருகிருக்க தலைவனுடன் பழகுவது முறையா? என்று தலைவி தலைவனிடம் கூறுகிறாள்.
- ✓ இப்பாடலில், நாம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்னும் குறிப்புப்பொருளும் தலைவியைத் தலைவன் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்னும் குறிப்புப்பொருளும் அமைந்துள்ளன.
- ✓ இக்குறிப்புப்பொருளே இறைச்சி ஆகும்.

20.மாணவர் பாடங்கேட்கும் முறையை தொல்காப்பியம் வழி விளக்குக.

- ✓ சிறப்புடைய மாணவர்கள், உலக வழக்கு, நூல் வழக்கு இலக்கணங்களை தெளிவுற அறிவர்
- ✓ கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர்
- ✓ ஆசிரியரை அணுகி பாடக்கருத்தைக்கேட்டு தெளிவு அடைவர்
- ✓ உயர் சிந்தனை உடையவர்களிடம் கலந்துரையாடிப் பயிற்சி பெறுவர்
- ✓ ஐயங்களை ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவுறுவர்
- ✓ தெளிவுற்ற கருத்துகளைப் பிறருக்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர்
- ✓ ஆசிரியர் கூறும் கருத்தை இருமுறை கேட்பவன் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர்
- ✓ மூன்றுமுறை பாடம் கேட்கும் மாணவர்கள் பிறருக்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்.

21.கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது___ யாது?



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- ✓ மதினா நகரில் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டோர் நிறைந்திருந்ததால் கலைஞர்களும், மறையவர்களும் தாம் எண்ணிய பொருள் வளத்தைக் கொண்டிருந்தனர் என்பதாம்.

22.மறுவிலாத அரசென இருந்த மாநகர் ___ உவமையைப் பொருளுடன் விளக்குக.

- ✓ குற்றம் குறை இல்லாத அரசன் ஆட்சி நடத்துவது பொல என்பது உவமையின் பொருள்.
- ✓ மதீனா நகருக்கு இது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.
- ✓ மதீனா நகரில் பகை, வறுமை, நோய் முதலானவை இல்லை.
- ✓ அவை ஓடி மறைந்த நிலையில் குறைவில்லாத மானுட அறம், அந்நகரில் செங்கோலாட்சி புரிந்தது.
- ✓ அதனால் மதீனா நகரம், சிறந்த அரசைப்போல் பொலிவுடன் இருந்தது என உமறுப்புலவர் கூறுகிறார்.

23.ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக

- ✓ ஆனந்தரங்கர் தன் நாட்குறிப்பில் , அவர்காலப் புதுவை, தமிழகம், தென்னிந்திய நிகழ்வுகளைப் பதிவுசெய்துள்ளார்.
- ✓ பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமம்
- ✓ பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர் தொனே சென்னையைக் கைப்பற்றிய விவரம் தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றப் பிரெஞ்சு அரசு நடத்திய போர்இராபர்ட் கிளைவ் படை எடுப்பு எனப் பல வரலாற்றுச் செய்திகளை நேரில் கண்டு உரைப்பதுபோல் நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.
- ✓ இவற்றை பார்க்கும் பொழுது அவர் ஒரு வரலாற்று ஆசிரியராகத் திகழ்வது புலப்படுகிறது.

24.மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

- ✓ மேகத்திடம் கூறுவதுபோல தலைவனுக்குத் தோழி குறிப்பினால் தலைவியை சந்திக்கும் இடம் கூறுகிறாள்.
- ✓ வேங்கை மலர் அணிந்து தலைவி, தோழியுடன் தினை புலம் காக்க செல்கிறாள்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ✓ கடலில் நீரை முகந்து, மரசம் போல் இடித்து, போர் வீரர் வாள் பொல் மின்னிய மேகமே, நீ அங்கே சென்று பொழிவாயா? என மேகத்தை கேட்பதுப்போல் தலைவனுக்கு குறிப்பால் உணர்த் துகிறாள்.
- ✓ இவ்வாறு கூறும் குறிப்பு பொருளே இறைச்சி ஆகும்.

25.ஆசிரியப்பாவின் இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

- ✓ அகவலோசை கொண்டது
- ✓ எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்றுவரும்
- ✓ இயற்சீர் மிகுந்தும், பிற சீர் கலந்தும் வரும்
- ✓ ஆசிரியத்தளை மிகுந்து வரும்

26.ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

- ✓ இங்கிலாந்து பிரான்சு போர்க் காலத்தில், புதுசேரி கப்பல் வாணிகம் தடைப்பட்டது.
- ✓ பொருளாதாரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்கள் பெருந்துன்பம் அனுபவித்தனர்.
- ✓ லெபூர் தொனேவின் ஒன்பது கப்பல்கள் வந்தபோது மக்கள் மகிழ்ததைக் கூறும் போது "கப்பல்கள்வருகின்ற செய்தியைக் கேட்டதும், நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற
- ✓ உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்ததுபோலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம்கிட்டினாற்போலவும்,
- ✓ தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷப்பட்டார்கள்.
- ✓ அதைக் காகிததத்தில் எழுத முடியாது எனப் பதிவு செய்துள் ளார்
- ✓ இதுவே இவருடைய வருணனைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

27.பிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோயில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?

- ✓ சுண்ணாம்புக்காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழைமையான ஓவியக் கலை நுட்பத்திற்கு /ப்ரெஸ்கோ ஓவியம் என்று பெயர்.
- ✓ இத்தகைய ஓவியம் அஜந்தா, எல்லோரா, சித்தன்வாசல் போன்ற இடங்களில் இருப்பவையாகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ✓ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர்
- ✓ கற்றறி கோயிலுக்கு உதாரணம் மகாமலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் போன்றவையாகும்.

28.கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

**கலைச் சொல்லாக்கம்:**

கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்கு தாய்மொழியில் முன்பே உள்ளே சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

**அகராதி :**

பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

29. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

- ✓ சேலத்து நாட்டில் குறி சொன்னதற்காக கிடைத்த சிலம்பு,
- ✓ கோலத்து நாடார் வரிசையாகக் கொடுத்த தண்டை
- ✓ பாண்டியனார் மகளுக்கு குறி கூறியதால் கிடைத்த பாடகம்
- ✓ குற்றாலநாதர் சந்நிதிப் பெண் கொடுத்த அணிமணி
- ✓ கண்டிய தேசத்தில் பழக்கத்தால் கிடைத்த காலாழி போன்றவை சிங்கி பெற்ற பரிசுகள் ஆகும்.

30.தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்துவன யாவை?

- ✓ சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒரு வகையான விளையாட்டு
- ✓ ஒருத்தி வினா கேட்க, மற்றொருத்தி விடை கூறுவதாக அமைந்திருக்கும்.
- ✓ இறைவன் செயல்களையும் அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது திருச்சாழல்வடிவமாகும்.
- ✓ சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்கு தாய் தந்தையும் இல்லை, இத்தன்மையனோ உங்கள் கடவுள்? என ஒரு பெண் கேட்க,எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும் என இன்னொருத்தி பதில் தருகிறாள்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

- ✓ அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது நஞ்சை சிவன் உண்டான். அதற்கு காரணம் யாதோ?
- ✓ அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு, உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.
- ✓ தான் முடிவு இல்லாதவனாக இருந்தும் அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானே, இது என்ன புதுமை?
- ✓ உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.
- ✓ இவ்வாறு இறைவனைக் குறித்து ஒரு பெண் கேள்வி கேட்பது போலவும், இன்னொருத்தி இறைவனது செயலை நியாயப்படுத்துவது போலவும் பாடிக்கொண்டே விளையாடும்போது இறைவனைப் பற்றிய மேன்மையான கருத்துகளை திருச்சாழல் வெளிப்படுத்துகிறது.

31.ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

- ✓ பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.
- ✓ அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகுநூதனமாகவும் நளினமாகவும் இருக்கும் .
- ✓ அவருடைய பாணி இரவல் பாணி அல்ல. கற்று அறிந்ததும் அல்ல.
- ✓ நம் நாட்டு மக்களின் தரத்தையும், அனுபவ அறிவையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.
- ✓ பேச்சு பயனைத் தரவேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

32.உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**இடம் :** பாரதிதாசனின்" புரட்சி கவி" காவியத்தில் உதாரன் கூறியது

**பொருள் :** தனக்கு மரண தண்டனை விதிக்கும் தருவாயில் ' தமிழ் மொழிக்குப் பழிவந்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது. குற்றம் இல்லாத உயர்தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று உதாரன் பொதுமக்களிடம் கூறுகிறான்.

**விளக்கம்:** இளவரசி அமுதவல்லிக்கு கவிதை சொல்லிக் கொடுக்க வந்தவன். இருவருக்கும் காதல் மலர, அரசன் அறிந்து மரண தண்டனை விதிக்கிறான். தண்டனை பெறுவதற்கு முன் உதாரன் கூறிய வீர உரையில் இதுவும்ஒன்றாகும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

33.சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

- ✓ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவன்
- ✓ சான்றோர்களுக்கு அரிய பொருள்கள் நல்குபவன்
- ✓ எப்பொழுதும் விழாக்கள் நிகழ்வதால் சேரநாடு செல்வவளமுடையது என்பது தெரியவருகிறது.
- ✓ அரசனானவன் தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக்காத்தான்.
- ✓ அதனால் சேரநாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.
- ✓ சேரலாதன் புதுவருவாய்ப் பெருக்கமும், ஈத்துவக்கும் இன்பமும் உடைய காரணத்தால் சேரநாடு செல்வ வளம் மிக்கதே என்பது உறுதியாகிறது.

34.ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன ___ ஏன்?

- ✓ பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.
- ✓ ஆக்கப்பெயர்களில் விகுதிகளே தனிச்சிறப்புடையன.
- ✓ பெயருடன் சேரும் விகுதிகள் - வண்டி, காரன், பணி, ஆள்
- ✓ வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள் - அடை+ மானம்
- ✓ பெயருடனும் வினயுடனும் சேரும் விகுதிகள் - அச்சு +அகம்
- ✓ பயன்பாட்டில் உள்ள மேலும் சில சொற்கள்:
- ✓ ஆணையாளர், அழைப்பாளர், கூட்டாளி, உதவியாள், மேலாளர், முதலாளி
- ✓ உளவாளி, நூலகம், மானம்,பட்டதார்,படியாள்

Padasalai

35.நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.

- ✓ வாண வேடிக்கைக்காரண் 'வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடிவிசயம்தான் எடுத்துக்கொள்வார்' .
- ✓ மேடைமீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும்.
- ✓ பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்.
- ✓ குடைகுடையாய் இறங்கி வரும். மாலை மலையாய் இறங்கிவரும்.
- ✓ உவமை ஜீவானந்தத்திற்கு பொருந்தியுள்ளது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

36. இன்குலாப், 'உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக்கூறுவதன் நயத்தை விளக்குக.

- ✓ ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன் என்றும்,
- ✓ பறவைகளோடு எல்லையை கடப்பேன் என்றும், பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தெரிந்த சொல்லால் அழைப்பேன் என்றும் இயற்கையோடு உறவுக்கொள்ள விரும்புகிறார் இன்குலாப்.
- ✓ உதவும் கரங்களுக்கு நான் தோழனாகவும், உதவமுடியாத மனிதர்களுக்கு நான் நேசனாகவும் இருப்பேன் என்கிறார்.
- ✓ உலகத்தை கடலாக வேண்டும் என்றும், அதில் ஒரு துளி நீராக தான் மாற வேண்டும் என்றும் விழைகிறார்.
- ✓ இவ்வாறு உலகத்தில் உள்ள அனைத்திலும் தான் இரண்டற கலந்துவிட இன்குலாப் விழைகிறார் என்பதனை நாம் இப்பாடல் வழியாக அறிந்துக்கொள்ள முடிகிறது.

37.தாமஸிகம் என்றால் என்ன?

- ✓ பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அவசியம் எதுவும் இல்லை
- ✓ நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- ✓ தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும்.
- ✓ மலர்ச்செப்பினுள் வழக்கம் போல் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை .
- ✓ இதைதான் தாமஸிகம் அதாவது"மெடீரியஸியம்" என்கிறோம்.

38.வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடுவன யாவை?

- ✓ வாய்க்கால், வயலுக்கு உபயோகப்படுகிறது.
- ✓ அலை கடலை மலையாகவும், மலையை அலை கடலாகவும் மாற்றிட நடக்கிறது.தன் வலிக்கு அடங்கிய புல்,புழு அனைத்தையும் கொண்டு வந்து காலத்தச்சன் கடலில் கூட்டும் மலைக்கு வழங்கி, தான் பட்ட பாடுகளைக் கூறி, மேலும் கொண்டு வருவதாக உறுதி கூறுகிறது.
- ✓ நீக்கம் இல்லா அன்பும், ஊக்கமும் உறுதியும் கொண்டு அனுதினமும் உழைக்கிறது என்று வாய்க்காலின் சிறப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

39.இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.
(தன்வீட்டு தோட்டத்து வேப்ப மரத்துடன் உரையாடல்)

**கவின்:**

உன் கிளையில் அமர்ந்துள்ள பச்சை கிளி உன்னைப்போலவே பசுமையாக இருப்பதால்அமர்ந்திருப்பதே தெரியவில்லை. அதன் இனிய குரல் மட்டும் தான் கேட்க முடிகிறது.

**வேப்பமரம்:**

எத்தனை பறவைகள் இதற்கு முன்பெல்லாம் இங்கு அமர்ந்து விட்டு செல்கின்றன. ஆனால்இப்பொழுதெல்லாம் அவை எங்கே சென்றன என திெரியவில்லை.

**கவின்:**

ஆமாம் மாலையில் நான் கேட்கும் அத்தனை பறவைகளின் ஒலியையும் இப்பொழுது கேட்கஇயலவில்லையே.

**வேப்பமரம் :**

இங்கே, நானும் என் நண்பர்களான, தேக்கு, மா, புளியம் அனைவரும் ஒன்றாக இருந்தோம். உங்கள் நண்பர்களுடன் இங்கே வந்து விளையாடினீர்கள். எங்கள் கிளைகளில் மீதெல்லாம் ஏறி நடப்பீர்கள். ஊஞ்சல் கட்டி, மகிழ்ந்திருப்பீர்கள். அப்படியே கண் அயர்ந்து உறங்கிவிடுவீர்கள். சிலநாட்களில் உணவுகூட எங்களின் கீழ்தான் உண்டீர்கள்.ஆனால் இன்று இங்கே நான் மட்டும் தான்இருக்கிறேன். என் தோழர்களையும் வெட்டிவிட்டீர்கள்.இங்கு யாரும் விளையாட வருவது மில்லை.

**கவின் :**

உண்மைதான் அழகாக இருந்த உங்களை உங்களின் பயன் தெரியாத நாங்களின் எங்களின் சுயநலத்திற்காக வெட்டி, வீடுகளாக மாற்றிவிட்டோம். எங்கே வசிக்கும் இந்த பறவையினம் உயிரினம் என பகுத்தறிவின்றி, சுயநலப்போர்வையில் எங்கள் வசதிக்காக இயற்கையை மறந்துவிட்டோம். எங்களை மன்னித்துவிடு மரமே

40.நீளும் கைகளில் தோழமை தொடரும் நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" ___ தொடை நயங்களை எடுத்தெழுதுக.

- ✓ மோனை: நீளும் - நீளாத, தொடரும் - தோழமை,
- ✓ எதுகை : நீளும் - நீளாத, தொடரும் - தோழமை
- ✓ இயைபு: தொடரும் - படரும்
- ✓ முரண் - நீளும்x நீளாத



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

You Tube

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com